இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 11-11-2025

# வாக்கை உறுதி செய்யுங்கள்!

**“எனது வாக்கே எனக்கு இருக்குமா என்று தெரியவில்லை**” என்று சொல்லி இருக்கிறார் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான பீட்டர் அல்போன்ஸ். இந்திய நாட்டின் தேர்தல் ஆணையம், ஒவ்வொருவரையும் அந்த நிலைமைக்குத்தான் கொண்டு வந்து விட்டுள்ளது.

S.I.R. எனப்படும் சிறப்பு வாக்காளர் பட்டியல் சீர்திருத்தத்தை கடுமையாக எதிர்க்கும் அதே நேரத்தில் அதனை மிகக் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், இது தொடர்பான சட்டப் போராட்டத்தை ஒரு பக்கம் நடத்தினாலும், பொதுமக்கள் விழிப்படைய ஒரு காணொளியை வெளியிட்டு இருக்கிறார்கள்.

**“ ‘உங்களின் வாக்கு நீக்கப்படுமா?’ என்று கேட்டால், அவ்வாறு ஒரு அபாயம் நிச்சயம் இருக்கிறது, இல்லை என்று சொல்லிவிட முடியாது. அதைத் தடுக்க வேண்டும் என்றால், உங்கள் பகுதிக்குரிய BLO யார்? என்று கேட்டு, அவரிடம் இருந்து கணக்கீட்டுப் படிவத்தை வாங்கி, சரியாக நிரப்பி, திரும்பச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கான ஒப்புகைச் சீட்டையும் மறக்காமல் வாங்க வேண்டும். இதுதான் உங்களின் வாக்குரிமையைப் பாதுகாக்கும்.”** என்று மிகத் தெளிவாக அறிவுரை சொல்லி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**“BLO-க்கள் தங்களின் பணியைச் சரிவர செய்யவில்லை என்றால், இந்த S.I.R. பணியே மொத்தமாக பாதிப்பைச் சந்திக்கும். BLO-க்களும், கட்சிகளின் BLA-2-க்களும் இணைந்து செயல்படத் தேவையான அனைத்தையும் செய்வோம் என்று தேர்தல் ஆணையம் சொன்னார்கள்! அவ்வாறு சொன்னார்களே தவிர, அவ்வாறு ஒரு சூழலை இதுவரை உருவாக்கவே இல்லை. தி.மு.க. BLA2 தயாராக இருந்தாலும் கூட, பல இடங்களில் BLO-க்கள் வராமல் இருக்கிறார்கள். இதையெல்லாம் மீறித்தான் நம்முடைய செயல் வீரர்கள் விழிப்பாகச் செயல்பட்டு வருகிறார்க**ள்” என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர்.

S.I.R.-க்காக வழங்கப்படும் கணக்கீட்டுப் படிவத்தில் பல குழப்பங்கள் இருக்கிறது. ஒரு வாக்காளர் எதற்காக அவரது உறவினர் பெயரைச் சொல்ல வேண்டும்? உறவினர் என்றால் யார்? எந்த உறவினரைச் சொல்வது? அதுவும் 2002 இல் அவர்களது EPIC எண்ணை எங்கிருந்து எப்படி தேடி கண்டு பிடிப்பது..? ஊர் மாறி இருந்தால், தெரு மாறி இருந்தால் என்ன ஆகும்? 2002 முதல் 2025 வரைக்குமான காலகட்டத்தில் தொகுதி வரையறை மூலம் பல்வேறு தொகுதிகளின் பெயர்கள் மாறியுள்ளன. அதே முகவரியில் இருந்தாலும் கூட ஒரு தொகுதியில் இருந்த ஊர் வேறொரு தொகுதியில் சேர்க்கப்பட்டு இருக்கலாம். தொகுதி மாறவில்லை என்றாலும் பலருக்கு வாக்குச்சாவடி மாறி இருக்கலாம். இதை எல்லாம் என்ன செய்வது?

மொத்தத்தில் விண்ணப்பத்தைக் கொடுத்து குழப்பம் ஏற்படுத்தவே துடிக்கிறது தேர்தல் ஆணையம். சரியான தகவல் தரவில்லை என்று சொல்லி வாக்காளர் பட்டியலில் இருந்து பெயரை நீக்கப் பார்க்கிறார்கள். இந்த நிலையில் ஒவ்வொரு வாக்காளரும் தங்களது வாக்கை உறுதி செய்து கொள்வதுதான் மிகமிக முக்கியமானது.

தேர்தல் ஆணையம் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு சுருக்கத் திருத்தம் (Special Summary Revision -SSR) மேற்கொள்கிறது. இதில் வாக்காளர் தனது பெயரை சேர்க்கலாம். இறந்து போனவர் பெயரை நீக்கலாம். தனது விபரங்களில் திருத்தம் செய்யலாம். இது ஆண்டுதோறும் நடக்கிறது. இப்போது மேற்கொள்ளப்படும் S.I.R. எனப்படும் சிறப்பு வாக்காளர் பட்டியல் சீர்திருத்தத்தில் வாக்காளர் பட்டியலில் உள்ள அனைத்து வாக்காளர்களும் விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும். நவம்பர் 4 தொடங்கி பிப்ரவரி 7 ஆம் தேதிக்குள் இந்தப் பணிகளை முடிக்கச் சொல்லி இருக்கிறார்கள். வாக்குச் சாவடி நிலை அலுவலர்களால் இந்த பணிகள் செய்யப்படுகின்றன.

வாக்காளர் பட்டியலில் இருக்கும் அனைவருக்கும் கணக்கெடுப்பு படிவம் தரப்படும். அதனை பூர்த்தி செய்து தரவேண்டும். இந்த படிவம் வீடு தேடி வரும். வராவிட்டால் அதனைக் கேட்டுப் பெற்றாக வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை கொடுத்ததற்கு அத்தாட்சி நகல் வழங்கப்படும். அதனையும் மறக்காமல் வாங்க வேண்டும். இவை அனைத்தும் ஏற்கனவே வாக்காளர்களாக இருப்பவர்கள் செய்தாக வேண்டும். புதிதாக சேர்ப்பதற்கான பணிகள் டிசம்பர் 9 தொடங்கி ஜனவரி 8-ஆம் தேதி வரை நடைபெற இருக்கிறது.

ஒரே முகவரியில் தான் வசிக்கிறீர்கள் என்றால் சிக்கல் இல்லை. வேறு முகவரிக்கு மாறி இருந்தால் மிகக் கவனமாக இருக்க வேண்டும். வாக்காளர்கள் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக இடம்பெயர்ந்து விட்டார்களா என்பதை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கணக்கெடுப்பின்போது பதிவு செய்கிறார்கள். பலரும் வேறு முகவரிக்கு மாறி விட்டாலும் வாக்களிக்கும் தினத்தன்று சொந்த ஊருக்கு வந்து வாக்களிப்பதை வழக்கமாக வைத்திருப்பார்கள்.

முந்தைய முகவரியில் கணக்கெடுப்பு படிவத்தை வழங்க முடியவில்லை என்றால் அவர்கள் பெயர் நீக்கப்பட்டு விடும். எனவே தற்போது வசிக்கும் இடத்தில் உள்ள வாக்குச் சாவடியில் தான் அவர் தனது பெயரை பதிவு செய்ய வேண்டும்.

**ஒவ்வொரு வாக்காளரின் வாக்குரிமையையும் உறுதி செய்ய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இது தி.மு.க.-வினருக்கு மட்டும் அமைத்திருக்கும் உதவி மையம் இல்லை; அனைவருக்குமானது. S.I.R.-ஆல் பாதிக்கப்படும் அனைத்துப் பொதுமக்களும் 08065420020 என்ற உதவி எண்ணைத் தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளலாம்.**

**ஒவ்வொருவரும் தங்களது வாக்குரிமையை உறுதி செய்யுங்கள்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.11.2025) புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ். இரகுபதி, கே.ஆர். பெரியகருப்பன், எஸ்.எஸ். சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, துரை வைகோ, கே.நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வீ.முத்துராஜா, தி.ராமச்சந்திரன், எம்.சின்னதுரை, பிரபாகரன், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு.அருணா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட

# அனைத்து மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுத்திடுக!

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, நவ. 11 -**

**இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட அனைத்து மீனவர்களை விடுவிப்பதற்கும் அவர்களின் மீன்பிடிப் படகுகளை மீட்பதற்கும் தேவையான அனைத்துத் தூதரக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அவர்கள் பாதுகாப்பாக தாயகம் திரும்புவதற்கு வழிவகை செய்யுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்கள் நேற்று முன்தினம் (09.11.2025) இரவு இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கை காவலில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்குத் தேவையான அனைத்துத் தூதரக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, அவர்கள் பாதுகாப்பாகத் தாயகம் திரும்புவதற்கு வழிவகை செய்யுமாறு வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (10.11.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், 09.11.2025 அன்று இரவு, மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்களையும், அவர்களது இயந்திரப் படகினையும் இலங்கை கடற்படையினர் சிறை பிடித்துள்ளதை தெரிவித்து ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

இந்திய மீனவர்களும் அவர்களது மீன்பிடி படகுகளும் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவது ஆழ்ந்த கவலைக்குரியதாக உள்ளதென குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 2024ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட பல மீனவர்கள் இன்னும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 128 மீனவர்களும் 248 மீன்பிடிப் படகுகளும் இலங்கை காவலில் உள்ளதாகவும் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

**மீனவர்கள் அடிக்கடி கைது!**

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் மீன்பிடித் தொழிலை முதன்மை வாழ்வாதாரமாக நம்பியுள்ள கடலோர சமூகங்களை ஆழமாகப் பாதித்துள்ளதாகவும், அவர்களின் குடும்பங் களுக்குக் கடுமையான துன்பங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காண கூட்டுப் பணிக் குழுவை மீண்டும் உயிர்ப்பித்திடவும், இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நீடித்தத் தீர்வை அடைந்திட ஒருங்கிணைந்த முயற்சிகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டு மென்றும் தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

**மீன்பிடி படகுகளை மீட்டிடுக!**

இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களை விடுவிப்பதற்கும் அவர்களின் மீன்பிடிப் படகுகளை மீட்பதற்கும் தேவையான அனைத்துத் தூதரக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அவர்கள் பாதுகாப்பாகத் தாயகம் திரும்புவதற்கு வழிவகை செய்யுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நவம்பர் மாத கோதுமை ஒதுக்கீடு நவ. 15 க்குள் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் அனுப்பி வைக்கப்படும்!

# நடப்பு குறுவைப் பருவத்தில் வரலாற்றுச் சாதனை - 13.48 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்!

## 1. 75 இலட்சம் நெல் விவசாயிகளுக்கு ரூ.3249 . 38 கோடி பணம் வழங்கப்பட்டுள்ளது!

## அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

**சென்னை, நவ. 11 -**

**ஒன்றிய அரசு ஒதுக்கீட்டின் படி நியாய விலைக் கடைகளுக்கு கோதுமை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. நவம்பர் மாதத்திற்கான கோதுமை ஒதுக்கீடு முழுதும் 15/11/25க்குள் அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டு விடும். நடப்பாண்டு குறுவைப் பருவத்தில் வரலாற்றுச் சாதனையாக 13.48 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து 1.75 இலட்சம் நெல் விவசாயிகளுக்கு ரூ 3249.38 கோடி பணம் வழங்கப் பட்டுள்ளது. என்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

இன்று ஒரு நாளிதழில் வந்த செய்தியை வைத்து எடப்பாடி பழனிசாமி 12573 கடைகளில் கோதுமை இல்லை என்று கூறியிருக்கிறார். ஒன்றிய அரசிடம் தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் கோதுமை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தொடர்ந்து கேட்டு வருகிறோம்.

ஜனவரி 2024 முதல் செப்டம்பர் 2024 வரை கோதுமை ஒதுக்கீடு மாதம், 8,576 மெட்ரிக் டன் மட்டுமே ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வந்தது.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாட்டிற்கான கோதுமை ஒதுக்கீட்டினை உயர்த்திட ஒன்றிய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத் திட்டம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வைத்த கோரிக்கையின் அடிப்படையில் அக்டோபர் 2024 முதல் பிப்ரவரி 2025 வரை 8,576 மெட்ரிக் டன்னிலிருந்து 17,100.38 மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டுப் பொது மக்களுக்குத் தங்குதடையின்றி நியாய விலைக் கடைகளில் விநியோகம் செய்யப்பட்டு வந்தது .தற்போது மார்ச் 2025 முதல் கோதுமை ஒதுக்கீட்டைப் பழைய அளவிற்கே குறைத்துத் தற்போது மாதம், 8,576 மெட்ரிக் டன் கோதுமை மட்டுமே ஒன்றிய அரசு வழங்கி வருகிறது. இதனைத் தொடர்ந்து நவம்பர் 2025 மாதத்திற்கு 8722 மெட்ரிக் டன் கோதுமை மாவட்டங்களுக்கு நுகர்வின் அடிப்படையில் உப ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கடந்த மூன்று மாதங்களில் கோதுமையின் நுகர்வு சதவீதம் சராசரியாக 92% எனப் பதிவாகி உள்ளது. நவம்பர் மாதத்தில் 08.11.2025 வரை 63%



மாதமும் 20 ஆம் நாளுக்குள் அனைத்துப் பொருள்களும் கடைகளுக்கு அனுப்பப்பட வேண்டும். ஆனாலும்15.11.2025க்குள் 100%

### ‘உண்மை நிலையைப் புரிந்துகொள்ளாமல் எடப்பாடி பழனிசாமி எல்லாவற்றிலும் அரசியல் செய்ய வேண்டாம்!’

(5,386 மெட்ரிக் டன்) கோதுமை நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்யபட்டுள்ளது. இருப்பு மற்றும் நுகர்வின் அடிப்படையில் ஒவ்வொரு கோதுமையும் நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்யப்பட்டு வழக்கம் போல் பொதுமக்களுக்குத் தங்கு தடையின்றி கோதுமை வழங்கப்படும்.

நடப்புக் குறுவைப் பருவத்தில் 9/11/25 வரை 1923 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 13.48 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 1.75 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ3249.38 கோடி பணம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. எடப்பாடி பழனிசாமி ஆட்சியின் கடைசி ஆண்டில் இதே காலகட்டத்தில் 4.41 இலட்சம் மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. அவர் ஆட்சியில் பொது ரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு ரூ1918 சன்ன ரகத்திற்கு ரூ1958 மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால் திராவிட மாடல் ஆட்சியில் பொது ரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ2500, சன்ன ரகத்திற்கு ரூ2545 வழங்கப்பட்டு வருகிறது.

ஆதலால் உண்மை நிலையைப் புரிந்து கொள்ளாமல் எடப்பாடி பழனிசாமி எல்லாவற்றிலும் அரசியல் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு - அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம், நாழிக்கல்பட்டி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 08.11.2025 அன்று நடைபெற்ற வரும் “நலம் காக்கும் ஸ்டாலின்” மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் இணை இயக்குநர் நலப்பணிகள் மரு.நந்தினி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.யோகானந்த் (ஆத்தூர்), மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி ஆகியோர் உள்ளனர்.